# மெட்ரோ ரயில் சேவை: செப்டம்பரில் 3.60 லட்சம் பேர் பயணம்

**சென்னை, அக். 1:** கரோனா பொது முடக்க தளர்வுக்குப் பின்பு, சென்னையில் மெட்ரோ ரயில் சேவை தொடங்கப்பட்டு, கடந்த ஒரு மாதத்தில் (செப்.7 முதல் செப்.30 வரை) 3 லட்சத்து 60 ஆயிரத்து 193 பேர் பயணம் செய்துள்ளனர். செப்டம்பர் 30-ஆம் தேதி மட்டும் 22,065 பேர் பயணம் செய்துள்ளனர்.

ஐந்து மாதங்களுக்குப் பிறகு, மெட்ரோ ரயில் சேவை செப்டம்பர் 7-ஆம் தேதி தொடங்கியது. முதல் கட்டமாக, விமான நிலையத்தில் இருந்து வண்ணாரப்பேட்டை வரையும், இரண்டாம் கட்டமாக, பரங்கிமலையில் இருந்து கோயம்பேடு வழியாக சென்னை சென்ட்ரல் வரையும் மெட்ரோ ரயில்கள் இயக்கப்பட்டன. மெட்ரோ ரயில் சேவை தொடங்கியபோது, குறைவான பயணிகள் பயணம் செய்தனர். பயணிகள் பாதுகாப்பாக பயணிக்கும் வகையில், பல்வேறு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இது தவிர, கியூஆர் குறியீடு முறையில் பயணச்சீட்டு பெறும் வசதி, பயண அட்டை பயணச்சீட்டு முறை ஆகிய வசதிகள் ஏற்படுத்தப்பட்டது. இதன்பிறகு, பயணிகள் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்தது.

இந்நிலையில், சென்னையில் மெட்ரோ ரயில் சேவை தொடங்கப்பட்டு, ஒரு மாதத்தில் (செப்.7 முதல் செப்.30 வரை) 3 லட்சத்து 60 ஆயிரத்து 193 பேர் பயணம் செய்துள்ளனர். செப்டம்பர் 30-ஆம் தேதி மட்டும் 22,065 பேர் பயணம் செய்துள்ளனர்.

இது குறித்து சென்னை மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள் கூறியது:

சமீபத்தில் தொடங்கப்பட்ட கியூ ஆர் குறியீடு பயணச் சீட்டு முறையைப் பயன்படுத்தி, 13 ஆயிரத்து 44 பேர் மெட்ரோ ரயிலில் பயணம் செய்துள்ளனர். பயண அட்டை பயணச்சீட்டு முறையை பயன்படுத்தி 70,009 பேர் பயணம் செய்துள்ளனர்.

மெட்ரோ ரயிலில் பயணிப்பவர்களுக்கு கியூ ஆர் குறியீடு பயணச் சீட்டில் ஒருவழிப் பயண அட்டை, இருவழிப் பயண அட்டை, பலவழிப் பயண அட்டை ஆகியவற்றில் செப்டம்பர் 11 முதல் 20 சதவீதம் தள்ளுபடி அளிக்கப்படுகிறது.

ஏற்கெனவே, செயல்பாட்டில் உள்ளபடி, மெட்ரோ ரயில் பயண அட்டைகளைப் பயன்படுத்தி பயணிக்கும் பயணிகளுக்கு 10 சதவீதம் கட்டணத் தள்ளுபடி வழங்கப்படும்.

பொதுமக்கள்மற்றும்மெட்ரோ ரயில் பயணிகளின் வசதிக்காக, அனைத்து மெட்ரோ ரயில் நிலையங்களில் உள்ள அனைத்து வழிகளும் பொதுப் பயன்பாட்டிற்குத் திறக்கப்பட்டுள்ளன என்றனர்.